பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

26.08.2025 7 15

செவ்வாய்க்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- ஃபிஜி உள்ளிட்ட பசிபிக் தீவு நாடுகள் உடனான நட்புறவை வலுப்படுத்துவதில் இந்தியா உறுதிபூண்டுள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.
- அடல் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 8 கோடியே 11 லட்சத்தைக் கடந்துள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
- தெற்கு காஸா பகுதியில் மருத்துவமனையின் மீது இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதலில் 5 பத்திரிகையாளர்கள் உட்பட 20 பேர் கொல்லப்பட்டனர்.
- நாட்டின் வடக்குப் பகுதி, ஆந்திரப்பிரதேச கடலோர பகுதி, குஜராத் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களின் சில பகுதிகளில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.
- உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரவு முதல் சுற்றில் இந்தியாவின் HS பிரனாய் இன்று ஃபின்லாந்தின் Joakim Oldorff-ஐ எதிர்கொள்கிறார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

ஃபிஜி உள்ளிட்ட பசிபிக் தீவு நாடுகள் உடனான நட்புறவை வலுப்படுத்துவதில் இந்தியா உறுதிபூண்டுள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் குடியரசுத்தலைவர் மாளிகையில் ஃபிஜி பிரதமர் திரு. Sitiveni Rabuka தம்மை சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்திய பயிற்சி நிறுவனங்களில் ஃபிஜி நாட்டு பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளிப்பது இரு நாடுகளுக்கு இடையேயான உறவில் முக்கிய அம்சமாகத் திகழ்கிறது என்று அவர் கூறினார்.

இந்தியாவின் ஆதார், மக்கள் வங்கிக் கணக்கு, மின்னணு பணப் பரிவர்த்தனை போன்றவை குறித்து ஃபிஜி நாட்டுடன் பகிர்ந்துகொள்வது மகிழ்ச்சியளிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

ஃபிஜி நாட்டுப் பிரதமரின் இந்தப் பயணத்தின் மூலம் இருநாட்டு ஒத்துழைப்புக்கு புதிய வழிவகைகள் ஏற்படும் என்றும், இருநாட்டு மக்கள் பயனடைவார்கள் என்றும் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவும், ஃபிஜி பிரதமர் திரு. Sitiveni Rabuka-வும் தெரிவித்தனர்.

**<<<<>>>>**

அடல் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 8 கோடியே 11 லட்சத்தைக் கடந்துள்ளது.

இவர்களில் 55 சதவீதம் பேர் பெண்கள் ஆவர்.

கடந்த நிதியாண்டில் ஒரு கோடியே 17 லட்சம் புதிய உறுப்பினர்கள் அடல் ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

<<<<>>>>

சுதந்திரப் போராட்ட வீரர் சர்தார் வல்லபாய் பட்டேல், பழங்குடியின தலைவர் பிர்சா முண்டா ஆகியோரின் 150வது பிறந்த தினம் மற்றும் முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் நூற்றாண்டு தினம் ஆகியவற்றைக் கொண்டாடுவது தொடர்பாக மூன்று உயர்நிலைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுக்களுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமை வகிப்பார் என்று மத்திய கலாச்சார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

அக்னிவீர் திட்டத்தின்கீழ் ராணுவத்திற்கு ஆள் சேர்க்கும் முகாம் ஈரோடு வ.உ.சி. பூங்கா மைதானத்தில் இன்று அதிகாலை தொடங்கியது.

இதில் 11 மாவட்டங்களைச் சேர்ந்த இளைஞர்கள் பங்கேற்று தங்கள் உடல் தகுதியை நிரூபித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

முத்ரா கடன் திட்டத்தின்கீழ் தொழில்முனைவோருக்கு மத்திய அரசு மூலம் கடன் வழங்கப்பட்டு வருகிறது.

இந்த கடனுதவி மூலம் தமது தொழில் வளர்ச்சியடைந்துள்ளதாக சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த தொழில்முனைவோர் ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

இந்த முத்ரா திட்டத்தின்கீழ் கடந்த நான்கரை மாதங்களில் 110 கோடி ரூபாய் அளவிற்கு வங்கிக் கடன் வழங்கப்பட்டுள்ளதாக பாரத ஸ்டேட் வங்கியின் துணைப் பொதுமேலாளர் திரு. பாலானந்த் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

<<<<>>>>

மாநிலத்தில் கடந்த மாதம் 10ஆம் வகுப்பு துணைத் தேர்வு எழுதி மதிப்பெண் மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பீடு கோரி விண்ணப்பித்தவர்களில் மதிப்பெண்

மாற்றம் உள்ள தேர்வர்களது பதிவெண்களின் பட்டியல் இன்று பிற்பகல் வெளியிடப்பட உள்ளது.

இதுகுறித்து அரசு தேர்வுகள் இயக்ககம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் மதிப்பெண்களை அறிந்துகொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறுகூட்டல் மற்றும் மறுமதிப்பெண் மாற்றம் உள்ள தேர்வர்கள் இன்று பிற்பகல் முதல் இணையதளத்தில் தங்களது விவரங்களைப் பதிவு செய்து தற்காலிக மதிப்பெண் சான்றிதழை பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்றும் அரசு தேர்வுகள் இயக்ககம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

தெற்கு காஸா பகுதியில் மருத்துவமனையின் மீது இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதலில் 5 பத்திரிகையாளர்கள் உட்பட 20 பேர் கொல்லப்பட்டனர்.

காஸா நகரில் இரண்டு வாரங்களுக்கு முன்பு நடத்தப்பட்ட தாக்குதலில் 6 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்ட நிலையில், தற்போது இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 2 ஆண்டுகளாக இஸ்ரேல் - ஹமாஸ் இடையே நடைபெற்று வரும் மோதலில் காஸாவில் இதுவரை 192 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டதாகவும், அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

<<<<>>>>

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கூடுதலாக 25 சதவீதம் வரி விதிக்கப்பட்டுள்ளதை அமெரிக்க அரசு அதிகாரபூர்வமாக அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

புதிய வரி விகிதம் நாளை முதல் அமலுக்கு வர உள்ளது.

<<<<>>>>

கிரேட்டர் நொய்டாவில் வரதட்சினை கொடுமை காரணமாக பெண் ஒருவர் கொலை செய்யப்பட்ட வழக்கு தொடர்பாக விரிவாக விசாரணை மேற்கொள்ளுமாறு உத்தரப்பிரதேச காவல்துறை தலைவரை தேசிய மகளிர் ஆணையம் வலியுறுத்தியுள்ளது.

இச்சம்பவத்தைக் கண்டித்துள்ள ஆணைய தலைவர் திருமதி விஜய ரகத்கர், இவ்வழக்கை விரைவாக விசாரிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

நாட்டின் வடக்குப் பகுதி, ஆந்திரப்பிரதேச கடலோர பகுதி, குஜராத் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களின் சில பகுதிகளில் இன்று கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

தில்லி, ஹரியானா, சண்டிகட், ஜம்மு-கஷ்மீர், லடாக், ஒடிசா, பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களிலும் இன்று கன முதல் மிக கன மழை பெய்யக்கூடும் என்று அறிவித்துள்ளது.

கேரளா, மாஹே, கோவா, மகாராஷ்டிராவின் மத்தியப் பகுதி, மத்தியப்பிரதேசம் மற்றும் வடகிழக்குப் பிராந்தியங்களில் அடுத்த 2 முதல் 3 நாட்களுக்கு மிதமானது முதல் கனமழை வரை பெய்ய வாய்ப்பிருப்பதாக தெரிவித்துள்ளது.

இதற்கிடையே லடாக்கில் நேற்று 44 மில்லி மீட்டர் மழை பதிவானதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஜம்மு-கஷ்மீரின் ஜம்மு பிராந்தியன் பல்வேறு பகுதிகளில் நேற்றிரவு முதல் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது.

ஜம்மு, ரியாசி, உதம்பூர், சம்பா, கத்வா, ரஜோரி மாவட்டங்களின் சில பகுதிகளில் கன முதல் மிக கனமழை பெய்யக்கூடும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

மழை காரணமாக ஜம்மு பகுதியில் தொடர்ந்து 2வது நாளாக இன்றும் அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

உலக பேட்மிண்டன் சாம்பியன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரவு முதல் சுற்றில் இந்தியாவின் HS பிரனாய் இன்று ஃபின்லாந்தின் Joakim Oldorff-ஐ எதிர்கொள்கிறார்.

பாரீசில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பி.சி. சிந்து, பல்கேரியாவின் Kaloyana Nalbantova-ஐ எதிர்கொள்கிறார்.

<<<<>>>>

ஆசிய துப்பாக்கிச் சுடும் சாம்பியன் போட்டியில் மகளிர் ஜூனியர் 25 மீட்டர் குழு பிரிவில் இந்தியாவின் பாயல், தேஜஸ்வினி, Riya Shrish Thatte குழு வெள்ளிப் பதக்கம் வென்றது.

கஜகஸ்தானின் Shymkent-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் இந்தியா இதுவரை 28 தங்கம், 10 வெள்ளி, 12 வெண்கலப் பதக்கங்களை வென்று பதக்கப் பட்டியலில் முதல் இடத்தில் உள்ளது.

<<<<>>>>

கோலாலம்பூரில் நடைபெற்ற 23 வயதுக்குட்பட்டோருக்கான நட்புணர்வு கால்பந்து போட்டியில் ஈராக் 2-1 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வென்றது.

<<<<>>>>